பக்கங்கள் 16

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மார்கழி 18 புதன்கிழமை 03.01.2024 அதிர்வு 156

## போதைப்பொருளுடன் சிக்கிய காதல் ஜோடி

### வவுனியாவில் பொலிஸார் அதிரடி

(கி.வசந்தரூபன்)

வவுனியா, சிதம்பரபுரம் பகுதியில் போதைப்பொருள் வைத்திருந்த சந்தேகத்தின் அடிப்படையில் காதல் ஜோடி 04



# ‘டீல்’ அரசியல் எங்களிடம் இல்லை!!!

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு

“நாங்கள் எவருடனும் ‘டீல்’ அரசியல் செய்யவில்லை. அரச கட்டமைப்பில் நிலவி வரும் ஊழல், மோசடி, திருட்டு முற்றிலும் இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம்.” 04



# யாழில் போதைப்பொருளுக்கு முடிவு கட்டப்படுமா? பொலிஸாரின் செயற்பாடுகளில் டக்ளஸ் அதிருப்தி



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் போதைப்பொருள் வியாபாரம் மற்றும் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கான பொலிஸாரின் நடவடிக்கைகள் தொடர்பில் அதிருப்தி வெளியிட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இந்தியக் கடற்றொழிலாளர் விவகாரத்துக்குத் திடமான தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தினார்.

வடக்கு மாகாணத்தில் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அவை பற்றிய நடவடிக்கைகள் தொடர்பாக ஜனாதிபதி செயலகத்தின் பிரதானி 04

# வட்டுக்கோட்டை இளைஞரின் மரணம் ‘மனித ஆட்கொலை’

### 21 சாட்சியங்கள், வைத்திய அறிக்கையின் அடிப்படையில் யாழ். நீதிவான் கட்டளை




(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டைப் பொலிஸாரின் கொடூரமான சித்திரவதைக்குள்ளாகி உயிரிழந்த இளைஞரின் மரணம் ”மனித ஆட்கொலை” என யாழ். நீதிவான் நீதிமன்றம் கட்டளை வழங்கியுள்ளது.

வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நாகராசா அலெக்ஸ் எனும் இளைஞர் பொலிஸாரின் சித்திரவதைகளுக்குள்ளான நிலையில் கடந்த நவம்பர் மாதம் 19ஆம் திகதி உயிரிழந்தார்.

அது தொடர்பான வழக்கு விசாரணை 04



# வவுனியா பொது வைத்தியசாலையில் உயிரிழந்தவருக்குக் கொரோனாவா?

## உடல் மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பி வைப்பு

(கி.வசந்தரூபன்)

வவுனியா பொது வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த நோயாளி ஒருவர் மரணமடைந்த நிலையில், அவருக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதா என்ற சந்தேகத்தில் அவரின் உடல் மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

அனுராதபுரம், பதவியா பிரதேசத்தைச் சேர்ந்த 55 வயதான நபர் சிறுநீரக நோய் காரணமாக வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்தார். எனினும், சிகிச்சை பலனின்றி நீமோனியா காய்ச்சலாக மாறி நேற்று இரவு அவர் மரணமடைந்தார்.

அவருக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதா என்ற சந்தேகம் ஏற்பட்ட நிலையில், அவருடைய உடல் மாதிரிகள் பரிசோதனைக்காகக் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.



அங்கவீனமான மகனை பின்புறமாக அமர்த்திக் கொண்டு

# மோ. சைக்கிளில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட பெண் கைது

(அஸ்ஹர் இப்றாஹிம்)

நோய்வாய்ப்பட்ட வலது குறைந்த தனது 11 வயது மகனை ஸ்கூட்டி ரக மோட்டார் சைக்கிளின் பின்புறம் அமர வைத்து போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த 46 வயதுடைய பெண்ணை இங்கிரிய பொலிஸார் கைது செய்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மோட்டார் சைக்கிளை நிறுத்திச் சோதனையிட்டபோது 2 கிராம் 250 மில்லி கிராம் ஹெரோயினும், ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பணமும், 8 கையடக்கத் தொலைபேசிகளும் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சந்தேக நபரான பாதுக்க பிரதேசத்தைச் பெண்ணும் கைது செய்யப்பட்டார்.

மேற்படி பெண் பாதுக்க பிரதேசத்திலிருந்து போதைப் பொருளை இங்கிரிய மற்றும் அதன் சுற்றுவட்டப் பிரதேசத்தில் மிக நீண்டகாலமாக விற்பனை செய்து வந்துள்ளார் என்று விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# பதுளையில் ஹெரோயினுடன் 5 பேர் வசமாகச் சிக்கினார்கள்

பதுளை, போதைப் பொருள் தடுப்புப் பிரிவுப் பொலிஸ் அதிகாரிகளால் ஹெரோயின் போதைப் பொருளுடன் ஐந்து சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

36, 42, 57, 63 மற்றும் 67 வயதுடையவர்களே நேற்று இவ்வாறு கைது செய்யப்பட்டனர் எனவும், இவர்கள் பதுளை நெலும கம மற்றும் பஹல்கம பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளை நகரைச் சூழவுள்ள பகுதிகளில் ஹெரோயின் உள்ளிட்ட போதைப் பொருள் விற்பனையில் இக்குழுவினர் ஈடுபட்டு வருகின்றனர் என்று கிடைத்த தகவலின் அடிப்படையில் சோதனை நடத்தப்பட்டு, கைது இடம்பெற்றது.

பதுளை அந்தெனிய பாலம் மற்றும் கலன் சந்திக்கு அருகில் இரண்டு சந்தேகநபர்களும், பதுலுபிட்டி, கைலாகொட மற்றும் நெலும் கமடி ஆகிய இடங்களில் மூன்று சந்தேநபர்களும் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டனர்.

பதுளை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வசந்த கந்தேவத்த மற்றும் பிரதேச குற்றப் புலனாய்வுப் பொறுப்பு அதிகாரி பி.ஓ.பி. பிரியந்த சர்மிந்த ஆகியோரின் பணிப்புரையின் பேரில் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் உத்தியோகத்தர்கள் இந்தச் சோதனையை மேற்கொண்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் பதுளை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர்.

## ஜனாதிபதி வெள்ளியன்று வவுனியாவுக்கு விஜயம்

# 3 மாவட்டங்களது அபிவிருத்திக் குழு கூட்டத்தில் ரணில் பங்கேற்றவுள்ளார்!

(கி.வசந்தரூபன்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வவுனியாவுக்கு விஜயம் செய்யவுள்ள நிலையில், வவுனியாவில் மூன்று மாவட்டங்களை உள்ளடக்கிய அபிவிருத்திக் குழுக் கூட்டத்தை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.


வடக்குக்கு நான்கு நாள் பயணமாக ரணில் விக்கிரமசிங்க நாளை (04) வியாழக்கிழமை விஜயம் செய்யவுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் நிகழ்வுகளில் நாளை வியாழக்கிழமை பங்கேற்கும் அவர், வெள்ளிக்கிழமை வவுனியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இதன்போது வவுனியா மாநகரசபை கலாசார மண்டபத்தில் வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் அபிவிருத்திக் குழுக் கூட்டம் ஜனாதிபதியின் பங்கேற்புடன் இடம்பெறவுள்ளது.

மாவட்ட மட்ட முக்கிய பிரச்சனைகள் தொடர்பாகவும் அங்கு கலந்துரையாடப்படவுள்ளன என்று மாவட்ட செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதன்பின், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் யாழ்ப்பாணம் செல்லவுள்ளார். இதற்கான ஏற்பாடுகள் அரச அதிகாரிகளால் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# பழுதடைந்த விதை உருளைக் கிழங்குகள் முறிகண்டி அக்கராயன் காட்டில் புதைப்பு!

(ந.லோகதயாளன்)

முறிகண்டி அக்கராயன் வீதியில் உள்ள காட்டுப் பகுதியில் பழுதடைந்த விதை உருளைக் கிழங்குகள் புதைக்கப்பட்டது.

நீண்ட சர்ச்சையில் அகப்பட்ட பழுதடைந்த உருளைக்கிழங்கு விடயம் நேற்றுடன் புதைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிப்பதற்காக 11 மில்லியன் ரூபா செலவில் எடுத்து வரப்பட்ட 21 மெட்ரிக் தொன் விதை உருளைக் கிழங்குகள் குப்பிளானில் உள்ள விவசாய அமைப்பிடம் கையளிக்கப்பட்ட போது அவை பயன்படுத்த முடியாத அளவுக்குப் பக்றீரியாவுடன் பழுதடைந்து காணப்பட்டது.

இதனால் அவற்றை பயன்படுத்த முடியாத நிலை மட்டுமன்றி அவற்றை அழிப்பதற்குக்கூட மண்ணில் புதைக்க முடியாத நிலையே உள்ளது என்று விவசாய அமைப்புக்கள் சுட்டிக் காட்டினர்.

இதன் காரணமாகக் கொழும்பில் இருந்து ஓர் குழு யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து பழுதடைந்த உருளைக் கிழங்கை புதைப்பதா அல்லது தகனம் செய்வதா என்று ஆய்வில் ஈடுபட்டது. புதைப்பதானால் எங்கே புதைப்பது என்ற ஆய்விலும் ஈடுபட்டனர்.

இந்த ஆய்வின் பிரகாரம் அவற்றை புதைப்பது எனவும் அவ்வாறு புதைக்கும் இடம் விவசாய செய்கை மேற்கொள்ளும் இடம் அல்லாத இடமாக இருக்க வேண்டும் எனவும் சிபார்சு செய்யப்பட்டது.

இவற்றின் அடிப்படையில் நேற்றைய தினம் பார ஊர்தியில் ஏற்றப்பட்டு கிளிநொச்சிக்கு எடுத்துச் செல்லப்பட்டது. கிளிநொச்சியில் இருந்து முறிகண்டி அக்கராயன் வீதியில் முறிகண்டிச் சந்தியில் இருந்து 8 கிலோ மீற்றர் தொலைவில் வீதியில் இருந்து காட்டுத் திசையில் 500 மீற்றர் தூரத்தில் கனரக இயந்திரம் உதவியுடன் புதைக்கப்பட்டது.

இந்த உருளைக் கிழங்கு புதைக்கப்பட்டதுடன் இதன் பின்னால் இடம்பெற்ற குளறுபடிகளும் புதைக்கப்படுமா என்று கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி யாழ்ப்பாணம் விவசாயிகளுக்கு வழங்கிய 11 மில்லியன் ரூபாவும் மண்ணில் புதைக்கப்பட்டு விடுமா அல்லது அந்தப் பணம் 2024 பயிர்ச் செய்கைக்கேனும் கிடைக்குமா எனறு யாழ்ப்பாணம் விவசாயிகள் நியாயமான கேள்விகயை எழுப்பியுள்ளனர். இதற்கு எந்த அதிகாரியும் பதிலளிக்க முன்வரவில்லை.

# மஹறரகம விடுதி ஒன்றில் இளைஞனின் சடலம் மீட்பு!

மஹறரகம ரயில் நிலைய வீதியிலுள்ள விடுதி ஒன்றில் இருந்து இளைஞன் ஒருவரின் சடலம் இன்று (03) காலை மீட்கப்பட்டுள்ளது என்று மஹறரகம பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் 34 வயதுடையவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நபர் நேற்று (02) மதியம் 1.30 மணி அளவில் இந்த விடுதிக்கு வந்து, மாலை 6 மணியளவில் அந்த இடத்தை விட்டு வெளியேறுவதாக விடுதிக்கு தெரிவித்தார்.

ஆனால், அவர் வெளியே வராததால் சந்தேகம் ஏற்பட்டு அறையைப் பார்த்த போது, சம்பந்தப்பட்ட இளைஞன் படுக்கையில் கிடப்பதைப் பார்த்து ஊழியர் ஒருவர் இது குறித்து பொலிஸாருக்குத் தகவல் கொடுத்துள்ளார்.

அதன்படி மஹறரகம பொலிஸ் மற்றும் நுகேகொட குற்றத்தடுப்பு பிரிவு அதிகாரிகள் வந்து சடலத்தைப் பார்வையிட்டனர்.

ஹோமாகம பிரதேசத்தில் விஷம் அருந்தி உயிரிழந்த நபரின் இறுதி சடங்குக்காக இந்த நபர் சென்றிருந்தமை தெரியவந்துள்ளது.

இறந்து கிடந்த விடுதி அறையில் விஷம் அடங்கிய பை, தண்ணீர் போத்தல் மற்றும் 2 கையடக்க தொலைபேசிகள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் மஹறரகம பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**வட்டுக்கோட்டை...**

யாழ். நீதிவான் நீதிமன்றில் நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் நடைபெற்று வருகின்றது.

மேற்படி வழக்கு நேற்று செவ்வாய்க் கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இளைஞரின் பிரேத பரிசோதனை அறிக்கை மன்றுக்குக் கிடைக்கப்பெற்றது. அதில் சித்திரவதைக்குட்படுத்தப்பட்ட காயங்கள் இளைஞரின் உடலில் காணப்பட்டன எனவும், இதனால் உயிரிழப்பு நேர்ந்தது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த வழக்கு விசாரணைகளில் 21 சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில் முகத் தோற்றளவில் இளைஞரின் உயிரிழப்பு, "மனித ஆட்கொலை" என்று நீதிவான் மரண விசாரணை கட்டளையின்போது குறிப்பிட்டார்.

மேலும் இரண்டாவது சாட்சி ஐந்து பொலிஸார் சித்திரவதை செய்தனர் என்று தெரிவித்த நிலையில், இதுவரையில் நால்வரே கைது செய்யப்பட்டுள்ள நிலையில் மற்றைய சந்தேகநபரையும் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தி மன்றில் முன்னிலைப்படுத்துமாறு இந்த வழக்கின் விசாரணைப் பொறுப்பதிகாரிக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

அத்துடன் மேற்படி குற்றத்தில் பொலிஸார் ஈடுபட்டிருப்பதால் நீதிமன்றக் கட்டளையின் பிரதியைப் பொலிஸ்மா அதிபருக்கு அனுப்புமாறும் மன்று கட்டளையிட்டது.

மேலும், குறித்த வழக்கு விசாரணை ஆவணங்களைச் சட்டமா அதிபர் திணைக்களத்துக்குப் பாரப்படுத்துமாறும் நீதிமன்றப் பதிவாளருக்கு நீதிவான் அறிவுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களின் விளக்கமறியலை எதிர்வரும் 16ஆம் திகதி வரையில் நீதிவான் நீடித்துள்ளார்.

**யாழில்...**

சாகல இரத்நாயக்க மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோரிடையே இடம்பெற்ற கலந்துரையாடலின்போது மேற்குறித்த விடயங்கள் பிரஸ்தாபிக்கப்பட்டன.

சூம் காணொளி ஊடாக இன்று நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், போதைப்பொருள் பாவனைக்கு எதிராக யாழ். மாவட்டத்தில் பொலிஸார் மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் அணுகுமுறைகளும் அதிருப்தியையும் சந்தேகங்களையும் ஏற்படுத்துகின்றன தெரிவித்த அமைச்சர், சில சந்தர்ப்பங்களில் போதைப்பொருள் வியாபாரிகள் தப்பித்துக் கொள்வதற்கான கால அவகாசத்தைப் பொலிஸார் வழங்கியதான சந்தேகம் மக்கள் மத்தியில் இருப்பதையும் சுட்டிக்காட்டினார்.

அதேபோன்று, வற் அதிகரிப்பு உட்பட்ட பொருளாதார நெருக்கடிகள் எதிர்கொண்டுள்ள வடக்கு கடற்றொழிலாளர்களுக்கு, இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறிய எல்லை தாண்டிய சட்டவிரோத தொழில் செயற்பாடுகள் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துவதால், அவற்றைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் அரசு காத்திரமான தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டினார்.

கடற்றொழிலாளர் விவகாரத்தைத் தீர்ப்பதற்கு இரண்டு நாட்டு கடற்றொழிலாளர்கள் மற்றும் துறைசார்ந்தோரை உள்ளடக்கி உருவாக்கப்பட்ட இணைந்த செயற்குழுவின் சந்திப்பு மற்றும் இரு நாட்டு அமைச்சர் மட்டத்திலான சந்திப்பு போன்றவற்றில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும் இதன்போது பிரஸ்தாபிக்கப்பட்டன.

அதேபோன்று, பனை தென்னை வள கூட்டுறவுச்சங்களின் செயற்பாடுகளை விஸ்தரிப்பதற்கான கடன் வசதிகளை ஏற்பாடு செய்து கொடுத்தல் மற்றும் வற் அதிகரிப்பு, எரிபொருள் விலையேற்றம் போன்றவற்றால் நாடளாவிய ரீதியில் பாதிப்பை எதிர்கொண்டுள்ள கடற்றொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்குதல் போன்ற பல்வேறு விடயங்கள் இந்தக் கலந்துரையாடலில் பிரஸ்தாபிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**போதைப் பொருளுடன்...**

கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டுள்ளது என்று சிதம்பரபுரம் பொலிசார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் சிதம்பரபுரம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் சோதனை செய்த போது, அங்கு தங்கி இருந்த காதல் ஜோடியிடம் கஞ்சாவும், தொலைபேசியினுள் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் ஐஸ் போதைப்பொருளும் கண்டுபிடிக்கப்பட்டன.

இதனையடுத்து கஞ்சா மற்றும் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டதுடன், அதனை உடமையில் வைத்திருந்த இருவரும் கைது செய்யப்பட்டனர்.

நீதிமன்றத்தில் காதலர்கள் இருவரும் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். அவர்களிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்கு நீதிமன்றத்தின் அனுமதியைப் பொலிஸார் பெறவுள்ளனர்.

இந்தக் கைது நடவடிக்கை வவுனியா உதவி பொலிஸ் அத்தியட்சகர் நாலக அசோக்குமாரவின் வழிநடத்தலில் சிதம்பரபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர்.நிரோசன் தலைமையில் இ.மதன்ராஜ், செ.வன்னி நாயக, சேனாதீர, மதுசங்க, ரஞ்சுலா சுபத்திரா ஆகியோரால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**டில் அரசியல்...**

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற புத்தாண்டு நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"புத்தாண்டில் ஒருவருக்கொருவர் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டாலும், 2 கோடி 20 இலட்சம் மக்கள் மிகவும் அவலமான வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றனர். இந்நிலையில், சமீபத்தில் ஒரு குடும்பம் தற்கொலை செய்து கொண்டது. இந்நேரத்தில் மனிதனை மரணப் படுக்கைக்கு கொண்டு செல்வதை விடுத்து மனிதனை வாழ வைப்பதே எமது கடமையாக இருக்க வேண்டும்.

இந்நாட்டு மக்கள் யாருக்கும் அடிமைகளாக இருக்கக் கூடாது. தாங்களாகவே எழுந்து நிற்கும் சூழலை உருவாக்க வேண்டும். அரச கட்டமைப்பில் நிலவி வரும் ஊழல், மோசடி, திருட்டு முற்றிலும் இல்லாதொழிக்கப்பட வேண்டும்.

தற்போதைய அரசு பல்வேறு கொடுக்கல் – வாங்கல்கள் மூலம் வங்குரோத்து நாட்டில் இருந்து கொண்டே டொலர்களைக் கூட திருடி வருகின்றது.

அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலர் கடந்த விடுமுறைக் காலத்தில் வெளிநாட்டுப் பயணங்களில் ஈடுபட்டு குடும்பமாக மகிழ்ச்சியான வாழ்க்கை நடத்தினாலும், வீதிகளில் செல்லும் ஏழைகள் உட்பட அனைத்து குடிமக்களும் பல இன்னல்களை எதிர் கொண்டுள்ளனர்.

தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரவியல் திணைக்கள மதிப்பீட்டின் பிரகாரம், குடும்ப அடிப்படையிலான குடும்ப அலகுகளில் 60 சதவீத வருமானம் குறைந்துள்ளது. 90 சதவீத குடும்ப அலகுகளின் செலவினம் அதிகரித்துள்ளது.

இந்த வங்குரோத்து நிலையிலும் சுமார் 3.4 சதவீதமானோர்களின் வாழ்க்கை மட்டம் உயர் நிலையை எட்டியுள்ளது. இவர்கள் சமூகத்தின் உயர் வகுப்பினர்."

– என்றார்.



# உயர்தர பரீட்சை அட்டவணையில் இடம்பெற்றுள்ளது சிறிய மாற்றம்

## அவதானிக்குமாறு பரீட்சார்த்திகளுக்கு அறிவுறுத்து




க.பொ.த. உயர்தர பரீட்சை அட்டவணையில் சிறிய மாற்றம் ஏற்பட்டுள்ளமை தொடர்பில் அவதானம் செலுத்துமாறு பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர பரீட்சார்த்திகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த முறை ஒரு புதிய பாடம் சேர்க்கப்பட்டுள்ளது. அது கொரிய மொழி. அந்த பாடத்தை சேர்க்க, அட்டவணையில் சிறிய மாற்றங்களைச் செய்ய வேண்டியிருந்தது.

எனவே, முன்னைய அட்டவணையைப் பயன்படுத்த வேண்டாம். ஏனெனில் சில வலைத்தளங்கள் இந்த அட்டவணையைக் காட்டக்கூடும்.

பரீட்சார்த்திகளின் வசதிக்காக இந்த அட்டவணையை அனுமதிப்பத்திரத்தில் காட்டியுள்ளோம். அதனால் வேறு எங்கும் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை.

இதேவேளை, அனர்த்தம் ஏற்படக்கூடிய பகுதிகளில் அமைந்துள்ள க.பொ.த. உயர்தர பரீட்சை நிலையங்களுக்கு பதிலாக மாற்று பாடசாலைகளைத் தயார்ப்படுத்தும் வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

அநுராதபுரம், கெக்கிராவ, பொலன்னறுவை, பசறை, அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் ஹசலக்க ஆகிய பிரதேசங்களில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.-என்றார்.

# 2023 இல் 124 மருந்துகள் தரப்பரிசோதனையில் தோல்வி



2023 ஆம் ஆண்டில் மொத்தமாக 124 மருந்துகள் தரப் பரிசோதனையில் தோல்வியடைந்துள்ளன என்று சுகாதார அமைச்சின் மருத்துவ விநியோகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வாறு தர பரிசோதனையில் தோல்வியடைந்த மருந்துகளில், 55 மருந்துகள் இந்தியாவிலும், 40 மருந்துகள் உள்நாட்டில் தயாரிக்கப்பட்டவை. மற்றவை சீனா, பாகிஸ்தான், ஜப்பான் மற்றும் பங்களாதேஷ் போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டவை.

தரப் பரிசோதனையில் தோல்வியடைந்ததாகக் கண்டறியப்பட்ட மருந்துகளில் திரும்பப் பெறப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தவிர Flucloxacillin Cap என்னும் மருந்தும் திரும்பப் பெறப்பட்டுள்ளதாகவும் அது ரத்மலானையில் உள்ள அரச மருந்து உற்பத்தி கூட்டுத்தாபனத்தால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சுகாதார அமைச்சின் கூற்றுப்படி, 2017 ஆம் ஆண்டில் இருந்து மொத்தம் 600 தரக் குறைபாடுகள் ஏற்பட்டுள்ளன. 2022 ஆம் ஆண்டில் 86 மருந்துகள் தரப் பரிசோதனையில் தோல்வியடைந்துள்ளன.

இதேவேளை 2019 ஆம் ஆண்டில் தரமற்ற மருந்துகள் தொடர்பில் 96 வழக்குகள் பதிவாகியுள்ளன. 2023 ஆம் ஆண்டில் மருந்துகளின் தரம் தொடர்பில் பல சர்ச்சைகள் மற்றும் இறப்புகள் ஏற்பட்டன. அது தொடர்பில் சுகாதார அமைச்சுப் பதவி மாற்றத்துக்கும் வழிவகுத்தமை குறிப்பிடத்தக்கது.

# மனநலம் பாதிக்கப்பட்ட மகள் தாக்கியதில் தந்தை உயிரிழப்பு!



காலி – வந்துரம்ப – கடம்புராவ பிரதேசத்தில் மனநலம் பாதிக்கப்பட்ட மகள் தாக்கியதில் தந்தை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று காலை உணவில் மருந்துகளை கலப்பது தொடர்பாக ஏற்பட்ட வாக்குவாதம் காரணமாக அவர் தனது தந்தையை தாக்கியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இறந்த தந்தை மாரடைப்பால் பாதிக்கப்பட்டவர் எனவும், அவரது மகளால் தாக்கப்பட்ட சிறிது நேரத்தில், அவர் உயிரிழந்துள்ளார் என்றும் தெரிய வந்துள்ளது.

அப்போது தாயும் வீட்டில் இருந்தார் என்றும் அவரும் அவரது மகளால் தாக்கப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

22 வயதுடைய தாக்கிய பெண் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் உயிரிழந்த தந்தை 54 வயதானவர்.

மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## சீனா - இந்தியா இடையில்...!

இந்தப் பிராந்தியத்தில் வல்லாதிக்க நாடுகளின் முரண்பாடுகள், முட்டுப்பாடுகளுக்கு இடையில் சிக்கித் தவிக்கும் சிறிய நாடுகள் அவற்றின் எதிர் விளைவுகளைப் பிரதிபலிக்க வேண்டிய கட்டாயத்துக்குள் உள்ளன.

சீனா - இந்தியா வல்லாதிக்கப் போட்டிகளுக்கு நடுவில் சிக்கிக் கொண்டுள்ள சிறிய அயல் நாடுகளான இலங்கை, மாலைதீவு போன்றவை இந்த இழுபறிகளுக்கு நடுவில் தமது சுய நிலைப்பாடுகளை பேணுவதற்காக நெருக்கடியான முடிவுகளை எடுத்து அறிவிக்க வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றன.

தனது துறைமுகங்கள், பொருளாதார கடல் வலயங்கள் உள்ளடங்கிய கடல் எல்லைக்குள் மேற்கு நாட்டு ஆராய்ச்சிக் கப்பல்கள் இயங்குவதற்குக் கடந்த திங்கட்கிழமை ஜனவரி முதலாம் திகதியிலிருந்து ஒரு வருட காலத்துக்கு இலங்கை தடை விதித்திருக்கின்றது.

வெளிப்படையாகக் கூறுவதானால் இலங்கையை ஒட்டிய கடற் பிராந்தியத்தில் சீனா முன்னெடுக்கவிருந்த கடல் ஆய்வுகளை தவிர்க்கச் செய்யும் கட்டாயம் கருதி இத்தகைய கொள்கை ரீதியான முடிவை இலங்கை அறிவித்திருப்பது கண்கூடு.

இந்தியாவின் மூலோபாய மற்றும் பாதுகாப்புக் கவலைகள், கரிசனைகளை அடிப்படையாகக் கொண்டு சீனாவுக்கு எதிரான மேற்படி முடிவை கொழும்பு எடுக்க வேண்டி நேர்ந்ததாகக் கருதப்படுகின்றது.

கடந்த ஆண்டு ஜூலையில் இலங்கை ஜனாதிபதிக்கும் இந்தியப் பிரதமருக்கு இடையில் நடந்த சந்திப்பின்போது இவ்விடயத்தில் இந்தியத் தரப்பின் கவலை நேரடியாக இந்தியப் பிரதமரினால் இலங்கை ஜனாதிபதிக்கு எடுத்துரைக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இலங்கையின் இந்த முடிவை வருத்தமளிக்கும் விவகாரமாக சீனா பிரதிபலிப்புக் காட்டியிருப்பதும் கவனிக்கத்தக்கது.

இதே சமயம் மாலைதீவில் நிலைமை மறுவளமாக இடம்பெற்றுள்ளது. மாலைதீவுப் பிராந்தியத்தில் இந்தியாவின் பங்களிப்பை சீனாவின் ஆட்சேபம் கருதி புறமொதுக்கி இருக்கின்றது மாலைதீவின் புதிய அதிபர் முகமது மொய்ஸின் அரசு.

கடந்த வருட இறுதியில் நடைபெற்ற மாலைதீவு ஜனாதிபதித் தேர்தலில் ‘இந்தியா அவுட்!’ என்ற சுலோகத்தை முன்வைத்து இந்திய எதிர்ப்பு நிலைப்பாட்டுடன் தேர்தல் களத்தில் இறங்கிய அவர், அந்த அரசியல் நிலைப்பாடு தந்த ஆதரவில் வெற்றியீட்டி ஜனாதிபதியுமாகி உள்ளார்.

இந்தப் பின்புலத்தில் சீனாவுக்கு ஆதரவாகவும் பாரதத்துக்கு எதிராகவும் பிரதிபலிப்புகளைக் காட்டுகின்றார் அவர்.

மாலைதீவில் கடல் மற்றும் நீரியல் வளவரைபட விவரம் திரட்டும் ஆய்வை இந்தியாவுடன் கூட்டுச் சேர்ந்து முன்னெடுக்க இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி முகமது சோலிஹ் ஒப்பந்தம் செய்திருந்தார்.

ஆனால் ‘இந்தியா அவுட்’ கோட்பாட்டுடன் அதிகாரத்துக்கு வந்த மாலைதீவின் புதிய அதிபர் இந்தியாவுடனான இந்த ஒப்பந்தத்தை ரத்து செய்கிறார் என ஒருதலைப்பட்சமாக அறிவித்துள்ளார். இந்த ஆய்வை மாலைதீவு தனது பிரதேசத்தில், தனித்து, தனக்காகச் செய்து கொள்ளும் என்று புதிய அதிபர் அறிவித்திருக்கின்றார்.

அதேசமயம், முந்தைய மாலைதீவு அதிபருடன் செய்து கொண்ட உடன்பாட்டின்படி மாலைதீவில் நிலை கொண்டிருக்கும் இந்திய இராணுவத்தினரை உடனடியாக விலக்கிக் கொள்ளுமாறும் மாலைதீவின் புதிய அதிபர் தற்போது வற்புறுத்துகின்றார்.

சீனாவின் ஆய்வு கப்பலுக்கு இலங்கையில் இடமளிப்பதில்லை என்ற முடிவு இந்தியத் தரப்புக்கு வரவேற்பளிப்பதாக இருந்தாலும், இதற்குத் தலைகீழான முடிவை இந்தியா தொடர்பான விடயத்தில் மாலைதீவு மேற்கொண்டிருப்பது புதுடில்லிக்கு அதன் அயல் உறவில் பாரிய பின்னடைவு என்பது மறுக்க முடியாத உண்மை.

# மஸ்கெலியா புரவுன்ஷீக் தோட்டத்தில் சிறுத்தை நடமாட்டத்தால் மக்கள் பீதி!

(மஸ்கெலியா நிருபர்)



கடந்த சில நாள்களாக மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள புரவுன்ஷீக் தோட்ட பகுதியில் சிறுத்தை நடமாட்டம் அதிகரித்துள்ளது.

இதனால் அந்தத் தோட்டத்தில் உள்ள எட்டுப் பிரிவுகளில் உள்ள தொழிலாளர்கள் பெரும் அச்சத்தில் உள்ளனர்.

வளர்ப்பு நாய்கள் இரவு நேரத்தில் சிறுத்தைகளால் கொண்டு செல்லப்படுகின்றன என்று அந்தத் தோட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

நாளாந்தம் பணிக்கு செல்லும் இவர்கள் தற்போது சிறுத்தைகள் நடமாட்டம் காரணமாக பீதியில் உள்ளனர்.

தேயிலை தோட்டங்கள் பல தற்போது காடாக மாறியதால் சிறுத்தை நடமாட்டம் அதிகரித்துள்ளது என்று தோட்ட நிர்வாகம் மீது குற்றம் சுமத்துகின்றனர்.



# உடுப்பிட்டி மதுபானசாலைக்கு எதிராக இன்று கண்டனமும் கடையடைப்பும்!

யாழ்ப்பாணம் – உடுப்பிட்டி பகுதியில் உள்ள மதுபானசாலைக்கு எதிராக கண்டனப் போராட்டம் ஒன்று இன்று (03) காலை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

உடுப்பிட்டி சந்தியில் நடைபெற்ற போராட்டத்தில் பெரும் எண்ணிக்கையான மக்கள் வயது வேறுபாடு இன்றிக் கலந்து கொண்டனர். இதற்கு வலுச் சேர்க்கும் வகையில் உடுப்பிட்டி பகுதியில் கடையடைப்பும் இடம்பெற்றது.

உடுப்பிட்டியில் மக்களின் எதிர்ப்பையும் மீறி மீள திறக்கப்பட்ட மதுபான சாலையால் கடுமையாக மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் அதனை உடனடியாக அகற்றக்கோரி உடுப்பிட்டி பிரதேசத்தில் உள்ள கடைகளை பூட்டி கடையடைப்புக்கு உடுப்பிட்டி சமூக மட்ட அமைப்புக்கள் ஒன்றாக சேர்ந்து அழைப்புவிடுத்தன.

போராட்டத்தின் இறுதியில் பிரதேச செயலகத்துக்குப் பேரணியாக சென்று ஜனாதிபதிக்கான மனு ஒன்று கையளிக்கப்பட்டது.









# கடன் வழங்குநர்களைத் தவிர்த்து பொருளாதாரத்தை நகர்த்த முடியாது

## அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிப்பு

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகிய கடன் வழங்குநர்களுடன் மேற் கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டைத் தவிர்த்து, நாட்டின் பொருளாதாரத்தை ஒரு தினத்துக்கும் முன்னெடுத்துச் செல்ல முடியாது என்று அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறி விக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று தகவல் திணைக்களத்தில் இடம் பெற்றது. இதன் போது அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர் தன இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் மேலும் அவர் தெரிவிக்கையில்,

சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத் திட்டத்தைச் செயற்படுத்தா விட்டால், யார் அரசை நிர்வகித்தாலும் எந்த அதிபர் நாட்டை ஆண்டாலும் அரசின் ஆயுள்காலம் இரண்டு வாரங் களுக்கு மட்டுப்படுத்தப்பட்டு விடும்.

தடம் புரண்டிருந்த நாட்டின் பொரு ளாதாரத்தை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசு



கடந்த வருடத்தில் மீள நிவர்த்தி செய் துள்ளது. பிறந்துள்ள புதிய வருடம் தீர்க்கமான ஒரு வருடமாகும்.

தற்போது நிலவும் பொருளாதார சவால் 2027 ஆம் ஆண்டு வரை தொடரும். சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத் திட்டம் 2027 ஆம் ஆண்டு நிறைவு பெறும்வரை சட்டப்படி செயற் பட்டாலே நெருக்கடியை நிவர்த்தி செய்ய முடியும்.

சர்வதேச இணக்கப்பாட்டுடனான சட்டங்கள் மற்றும் நிதி முறைமைக்கு இணங்க நாடு என்ற ரீதியில் நாம் நிதிச் சந்தைக்குச் சென்று பிணை முறியை விநியோகித்துக் கடனைக் கோரினாலும் 2027 ஆம் ஆண்டு எமக்கு 1500 மில்லியன் டொலர்களை மட்டுமே கடனாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

2027 ஆம் ஆண்டுவரை மூன்று, நான்கு வருடங்களுக்கு இந்த சவால்கள் தொடரும்.

பெருமளவு இறக்குமதியிலேயே தங்கியுள்ள பொருளாதாரத்தை கொண் டுள்ள எமது நாடு எரிபொருள், உரம், மருந்து, இரசாயனப் பொருள்கள், அரிசி, மா, சீனி, கிழங்கு, வெங்காயம், பருப்பு, மிளகாய் உள்ளிட்ட நுகர்வு பொருள்கள் மற்றும் இயந்திரங்கள், வாகனங்கள் போன்றவற்றையும் இறக்குமதி செய்தே ஆக வேண்டும்.

அவற்றை இறக்குமதி செய்வதற்காக அரசின் கையிருப்பின் அடிப்படையில் கடன் பத்திரத்தை விநியோகிப்பது அவசியம். இந்தப் பொருள்களைக் கொள்வனவு செய்யாமல் இரண்டு வாரங்களைக் கூட எம்மால் முன்னெடுத் துச் செல்ல முடியாது.– என்றார்.

# வெளிநாட்டுக் கப்பல்களிடம் கட்டணம் பெற்றுக் கொள்ளச் சட்ட மூலம் தேவை

## நிறைவேற்றுமாறு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவிப்பு



இலங்கை கடற்பரப்பில் பயணிக்கும் வெளிநாட்டு கப்பல்களிடம் இருந்து டொலர் கட்டணத்தை பெறும் உரிமம் இதுவரை நடைமுறையில் இல்லை. இந்தச் சட்ட மூலத்தை நிறைவேற்றுவ தன் மூலம் வெளிநாட்டுக் கப்பல்களிடம் இருந்து டொலர் கட்டணத்தை பெற்றுக் கொள்ளும் உரிமைக்கு தேவையான சட்ட அதிகாரம் இலங்கைக்கு கிடைக் கும்.

இவ்வாறு நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தலைமையில் தேசிய நீர் விஞ்ஞான சட்டம் தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவில் பரிசீலிக்கப்பட்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தேசிய நீரியல் அலுவலகம் அமைப் பதன் மூலம், நீரியல் ஆய்வாளர்கள் மற்றும் கடல் வரைபட வல்லுனர்களின் பதிவு மற்றும் அது தொடர்பான விடயங்கள் மேற்கொள்ளப்படும் என இதில் கலந்து கொண்ட அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன், இங்கிலாந்து ராயல் நேவி கப்பல் போக்குவரத்துக்காகத் தென் கடல்களை உள்ளடக்கிய 3 வரைபடங்களை உருவாக்கியுள்ளது என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, வரைபடங்களை உரு வாக்குவதற்கு இலங்கையில் இருந்து தரவுகள் மாத்திரமே வழங்கப்பட்டுள்ளன என்று அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள் ளனர்.

மேலும், தரவுகளைப் பெற்றதன் பின்னர் சம்பந்தப்பட்ட கடற்பரப்புகளுக் கான வரைபடங்களை உருவாக்குவ தற்கு இலங்கைக்கு உரிமை உள்ளதாக கடற்படை அதிகாரிகளால் குழுவிடம் தெரிவிக்கப்பட்டது.

இந்த புதுப்பிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில், தொடர்புடைய வரைபடங்களும் புதுப்பிக்கப்பட்டு டொலர்களைப் பெற்றுக் கொள்ள முடி யும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

# உயிர்காப்பு மருந்துகளுக்கு எவ்வித தட்டுப்பாடும் இல்லை

## சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண தகவல்



இலங்கையில் தற்போது, பதிவு செய்யப்பட்ட 850 அத்தியாவசிய மருந்துகளில், உயிர் காப்பு மருந்துகளுக்கு எவ்வித தட்டுப்பாடும் இல்லை என்று சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (2) இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது நாட்டில் பதிவு செய்யப்பட்ட 850 அத்தியாவசிய மருந்துகள் காணப்படுகின்றன. அவற்றில் உயிர் பாதுகாப்பு மருந்துகளுக்கு எவ்வித தட்டுப்பாடும் இல்லை.

தட்டுப்பாடுகள் காணப்படும் மருந்துப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

அதே போன்று அத்தியாவசிய மருத்துவ உபகரணங்கள் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

5 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் மத்தியில் தீவிரமடைந்திருந்த மந்த போசனையைக் கட்டுப்படுத்துவதற்கு யுனிசெப், உலக சுகாதார ஸ்தாபனம் உள்ளிட்ட நிறுவனங்களுடன் இணைந்து பல வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

அதற்கமைய குறுகிய காலத்துக்குள் ஏற்படும் மந்த போசனை நிலைமை தற்போது குறைவடைந்துள்ளது. இதே வேளை தொற்றா நோய்கள், தொற்று நோய்கள் தொடர்பிலும் விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு டெங்கு நோய் காரணமாக 50 மரணங்கள் பதிவாகியிருந்தன. இவ்வாண்டில் இவ்வாறான நிலைமை ஏற்படாமல் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அத்தோடு கடந்த ஆண்டில் இறுதி காலாண்டில் அம்மை நோய் பரவல் சற்று அதிகரித்த போக்கில் இருந்தது. சில பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு உரிய வயதில் இதற்காக தடுப்பூசியை வழங்காமை இதற்கான பிரதான காரணியாக இனங்காணப்பட்டுள்ளது.

எனவே இந்த மாதத்தின் இரண்டாம் வாரத்திலிருந்து தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு, அதனை வழங்கும் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

ஜே.என்.1 பிறழ்வு குறித்து சுகாதார அமைச்சு உன்னிப்பாக அவதானித்து வருகிறது.

சீரற்ற காலநிலையால் காய்ச்சல் உள்ளிட்ட நோய் நிலைமைகளை ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்வதற்காக முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியைப் பேணுதல் என்பவற்றைப் பின்பற்றுதல் உகந்ததாகும்.

இவை தவிர வருடத்துக்கு வீதி விபத்துக்களால் 12 ஆயிரம் பேர் உயிரிழக்கும் துரதிஷ்டவசமான நிலைமை காணப்படுகிறது.

இளைஞர்கள் அதிகளவில் மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் உயிரிழக்கின்றனர். வருடத்துக்கு சுமார் 60 லட்சம் பேர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுகின்றனர்.

அவர்களில் 10 லட்சம் பேர் விபத்துக்கு உள்ளானவர்களாக உள்ளனர். எனவே இது தொடர்பில் இவ்வருடத்திலாவது அனைவரும் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும்.–என்றார்.






# அட்டாளைச்சேனை வெள்ளப் பாதிப்பை பார்வையிட்டது பிரதேச செயலாளர் குழு!

(எம். எப். நவாஸ் )

அட்டாளைச்சேனைப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட அட்டளைச்சேனை, பாலமுனை, ஒலுவில் பிரதேசங்களில் தொடர்ந்து பெய்து வரும் அடை மழை காரணமாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் குழுவினர் நேரடியாக விஜயம் செய்து பார்வையிட்டனர்.

பாலமுனை இளைஞர்கள் சபையினர் பாலமுனை பிரதேசத்தில் அடை மழையால் பாதிக்கப்பட்ட வளவுகள், வீதிகள், வடிகான்கள் மற்றும் வீடுகளுக்குள் தேங்கிய வெள்ள நீரை வழிந்தோடச் செய்யும் பொருட்டு களப்பணியில் ஈடுபட்டனர்.

அத்துடன் உலர் உணவுப் பொருள்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# 55 ஆசிரியர்களை ஒரே குடையில் பாராட்டி மகிழ்ந்தனர் மாணவர்கள்

(எம்.எப்.நவாஸ்)

அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையில் கல்வி பயின்று 1997ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள், தமது ஆசிரியர்களின் உன்னத சேவைகளைப் பாராட்டும் பொருட்டு ஒழுங்கு செய்திருந்த கலங்கரை தீபங்களுக்கான கௌரவிப்பு விழா அட்டாளைச்சேனை யாடோ விடுதி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த மாணவர் குழாமின் நடப்பாண்டு தலைவரும் மொறட்டுவ பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி றிஸ்வி நூர்தீன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தரம்-01 முதல் க.பொ.த. உயர்தரம் வரை கல்வி போதித்த 55 ஆசிரியர்கள்



பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன் நிகழ்வின் ஞாபகார்த்தமாக கலங்கரை தீபங்கள் எனும் மலரும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

# பாலம் உடைந்ததில் போக்குரத்துப் பாதிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மஹியங்கன, பகரகம்மன கிராமத்துக்குச் செல்லும் ரோஹன சந்திக்கு அருகிலுள்ள சிறிய பாலம் உடைந்து விழுந்துள்ளதால் போக்குவரத்து முற்றாக துண்டிக்கப்பட்டுள்ளது.

மஹியங்கனை, 20 ஆம் கட்டையில் இருந்து பகரகம்மன கிராமத்துக்குச் செல்லும் வீதியில் ரோஹன சந்திக்கு அருகில் உள்ள சிறிய பாலம் கால்வாயில் அதிகளவு வெள்ளநீர் செல்வதால் உடைந்து விழுந்தது.

இந்தப் பாதையில் மக்கள் போக்குவரத்து செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.









# அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மட்டு. இந்து இளைஞர் பேரவை உதவிகள்

(ந.குகதர்சன் )

மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு அவசர உதவியை வழங்கியுள்ளது.

இதன் அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை பிரதேசத்தின் எல்லையான வெருகல் மகாவலி கங்கை பெருக்கெடுத்த காரணத்தால் அந்தக் கிராமத்தைச் சூழ முற்றாக பாதிக்கப்பட்ட 47 குடும்பங்கள் இரண்டு இடைத்தங்கல் முகாம்களுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

இவர்களுக்கு ஜேர்மன் நாட்டில் வசிக்கும் எஸ்.தனபாலசிங்கம் குடும்பம் வழங்கிய ஒரு லட்சம் ரூபாவையும் சுவிஸ்லாந்து சைவநெறிக்கூடம் ஞான லிங்கோஷ்வரர் ஆலயம் வழங்கிய ஒரு லட்சம் ரூபாவையும் பயன்படுத்தி உடனடி உதவிகள் மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையால் வழங்கப்பட்டன.

ஒரு குடும்பத்துக்குத் தலா ஐயாயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் உதவியாக வழங்கப்பட்டன.

அதில் அரிசி, சீனி, பருப்பு, கடலை, மிளகாய்த்தூள், உப்பு, தேயிலை பக்கற், சோயா பக்கற்றுகள், தோங்காய் பால்மா பெட்டி , பாய் போன்ற பொருள்கள் உள்ளடங்கும்.

இந்த உதவிகளை மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சீனித்தம்பி யோகேஸ்வரன், பேரவை உறுப்பினர்கள், கதிரவெளி கிராம அதிகாரி விஜயராஜா, கதிரவெளி பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் இணைந்து வழங்கினர்.

இரண்டு உதவி வழங்குநர்களின் இரண்டு லட்சம் ரூபா நிதி தவிர ஏனைய நிதி பேரவை நிதியில் இருந்து வழங்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.



# காரைதீவு மாவடிப்பள்ளி வீதியில் வெள்ளம்!

(வி.ரி. சகாதேவராஜா,
நூருல் ஹுதா உமர்)



கடந்த சில நாள்களாக பொழிந்து வரும் கனமழையை அடுத்து காரைதீவு மாவடிப்பள்ளி – அம்பாறை பிரதான வீதியில் வெள்ளம் பரவுகிறது.

வாகனங்கள் சிரமத்துக்கு மத்தியில் பயணித்து வருகின்றன.

காரைதீவு இராணுவ முகாம் ஊடாக விபுலானந்தா கலாச்சார மண்டபத்துக்குச் செல்லும் பிரதான வீதியிலும் வெள்ளம் பரவுகிறது. அங்கும் பயணிகள் சிரமத்துக்கு மத்தியில் பயணிக்கின்றனர்.

இந்தப் பகுதிகள் காரைதீவு வெள்ளக் காடாகக் காட்சிளிக்கிறது.

குறிப்பாக கந்தசுவாமி ஆலய வளாகத்தில் வெள்ளம் சூழ்ந்துள்ளது.

காரைதீவிலுள்ள தாழ் நில பிரதேசங்களிலும் வயல் வெளிகளிலும் வெள்ளம் தேங்கி நிற்கிறது.

கடற்றொழில் மற்றும் விவசாயம் பாதிக்கப்படுகிறது. மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

வீதி வடிகால்கள் மக்களாலும் பிரதேச சபையினராலும் ஆங்காங்கே சுத்தம் செய்யப்பட்டு வருகின்றன.



# வெல்லாவெளி பாலத்தில் ஆகாயத்தாமரை அகற்றல்

(திலக்ஸ் ரெட்ணம்)

மட்டக்களப்பு போரதீவுப்பற்று பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட வெல்லா வெளியையும் மண்டூர்ப் பகுதியையும் இணைக்கும் பாலத்தில் படர்ந்திருந்த ஆகாயத் தாமரையை அகற்றும் பணியில் வெல்லாவெளி கிராம மக்கள் ஈடுபட்டுள்ளனர்.

பாலத்தின் கீழ் படர்ந்துள்ள ஆகாயத் தாமரையால் அப்பகுதியில் உள்ள வெள்ள நீர் செல்வதற்கு தடங்கல் ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாகவே இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவிவரும் கடும் மழையுடன் கூடிய வானிலையால் போரதீவுப்பற்று பிரதேசங்கின் பல கிராமங்கள் நீரில் மூழ்கியுள்ளன. மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது.




# உறவினர் வீடுகளில் தங்கியுள்ள மக்களுக்கு நிவாரண உதவிகள்

(நடராஜன் ஹரன்)

அம்பாறை மாவட்டத்தில் பெய்து வரும் அடை மழையின் தாக்கத்தால் ஆலையடிவேம்பு பிரதேசத்தில் நாவடக் குடா, வாச்சிக்குடா, ஆலையடிவேம்பு பகுதிகளில் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 300 இற்கும் அதிகமானவர்கள் தங்களது உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர்.

இவர்களுக்கான வெள்ள அனர்த்த நிவாரண உதவிகள் இடர்கால நிவாரண உதவித் திட்டத்தின் கீழ் அம்மன் மகளிர் இல்ல பொன்டேஷன் தலைவர் வாமதேவன் தலைமையில் மக்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.



# மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது ஆத்திமுனைக்குச் செல்லும் வீதி!

**(நிந்தவூர் செய்தியாளர்)**

வெளிப் பிரதேசங்களில் இருந்தோ அல்லது பொத்துவிலில் இருந்தோ ஆத்திமுனைக்கு வாகனங்களில் வருபவர்கள் மற்றும் ஆத்திமுனை, சர்வோதயபுரம், ஹிஜ்ரத் நகர் போன்ற கிராமங்களிலிருந்து செல்பவர்கள் கவனமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மழை தொடர்ச்சியாக பெய்து வருவதன் காரணமாக இடம்பெற்ற வெள்ளப் பெருக்கால் பொத்துவில் ஆத்திமுனைக்கு செல்லும் வீதியின் நிலை மிகவும் மோசமடைந்து பயணிப்பதற்கு பொருத்தமற்றதாக உள்ளது.

குறித்த வீதியானது 12 கிலோ மீற்றர் தூரம் வரை கொங்ரீட் வீதியாக புனர்நிர்மாணம் செய் நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும், அதன் அபிவிருத்திப் பணிகள் சுமார் இரண்டு ஆண்டுகளாக இடைநடுவே கைவிடப்பட்டுள்ளன.

வீதியின் குறிப்பிட்ட பகுதியே இவ்வாறு சேதம் அடைந்துள்ளது.





# மண்முனையில் சேவைநலன் பாராட்டு விழா

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகத்தில் தங்களுக்கு வழங்கப்பட்ட கடமைகளுக்கு அப்பால் பொதுமக்கள் நலனுக்கான கடந்த வருடம் சேவையாற்றிய உத்தியோகத்தர்களையும், சிறப்பாக கடமையாற்றிய உத்தியோகத்தர்களையும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பிரதேச செயலாளர் சிவப்பிரியா வில்வரெட்ணம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர், கணக்காளர், நிர்வாக உத்தியோஸ்தர் மற்றும் பிரதேச செயலக உத்தியோஸ்தர்கள் கலந்து கொண்டனர்.





# சர்வதேச ரீதியில் தனித்துவமாக ஏற்கப்பட்டவர்தான் சந்திரசேகரன்!

## நினைவு நிகழ்வில் கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் உரை

**(தலவாக்கலை நிருபர், பொகவந்தலாவ நிருபர்)**

அமரர் பெரியசாமி சந்திரசேகரன் மலையத்துக்கு மாத்திரமல்ல சர்வதேச ரீதியில் ஒரு தனித்துவமான தலைவனாக ஏற்றுக்கொள்ளப்பட்டார். அவர் எல்லா சமூகத்துடனும் நல்லுறவை பேணியவர்.

விதைத்தவன் உறங்கினாலும் விதைகள் உறங்காது என்ற கூற்றை உண்மையாக்கிய மலையக தலைவன் அமரர் பெரியசாமி சந்திரசேகரன் என்றால் அது மிகையாகாது. மறைந்த எம் தலைவன் புரட்சி தலைவன் மட்டுமல்ல ஒரு தனித்துவமிக்க ஒரு தலைவன் என பெருமிதம் கொள்கின்றேன்.

இவ்வாறு ஐக்கிய தொழிலாளர் முன்னணியின் தலைவரும் கல்வி இராஜாங்க அமைச்சருமான அருணாச்சலம் அரவிந்தகுமார் தெரிவித்தார்.

மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபகத் தலைவர் அமரர் பெரியசாமி சந்திரசேகரனின் 14 ஆவது சிரார்த்த தினம் நேற்று முன்தினம் புத்தாண்டு தினத்தில் தலவாக்கலை நகரில் அமைந்துள்ள ஐக்கிய தொழிலாளர் முன்னணியின் அலுவலகத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

இதில் கலந்துக்கொண்டு உரையாற்றும்போது கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

அடுத்த தேர்தலைப் பற்றிச் சிந்திப்பவன் அரசியல்வாதியாகிறான், அடுத்த சந்ததியைப் பற்றிச் சிந்திப்பவன் தலைவனாகிறான் என்று எழுத்தாளர் சோ குறிப்பிட்டது போல சந்திரசேகரன் தன் அடுத்த சந்ததிக்கான விடிவுக்கான அடித்தளத்தை அர்த்தத்தோடு இட்டு சென்றுள்ளார்.

தன்னிடம் இருப்பதை தன்னலம் கருதாது பகிர்ந்துகொள்பவன் தான் வள்ளலாகின்றான். தனது செல்வங்களையோ சொத்துக்களையோ பிறருக்கு தானம் செய்வதற்கு சமமாக தன்னையும், தனது கொள்கைகளையும் தான் சார்ந்த மக்களுக்காக, அவர்களின் நலனுக்காக அர்ப்பணம் செய்பவனும் ஒரு வகையில் வாரி வழங்கும் வள்ளலாகின்றான்.

தன் சமூக அவலங்களைக் கண்டு சந்திரசேகரன் அவதானியாக மாத்திரம் இருக்கவில்லை. அல்லது விமர்சனம் செய்து கொண்டு அதன் பொறுப்புக்களை ஏனையவர்கள் மீது சுமத்திவிட்டு பார்வையாளராக இருக்கவில்லை. அல்லது நீங்கள் உங்கள் உரிமைக்காக போராடுங்கள் என்று கூறிவிட்டு ஒதுங்கியும் இருக்கவில்லை.

என் பின்னால் வாருங்கள் என்று கூறித்தான் தனது சேவைகளை தொடர்ந்தார். தனது இருபது வயதிலேயே தன் சமூகம் சார்ந்த அவலங்களுக்கு குரல்கொடுக்க ஆரம்பித்த போது, அவருக்கு அரசியல் பின்புலமோ, பொருளாதார பலமோ அல்லது கட்சி என்கிற அமைப்போ இருக்கவில்லை. ஆனால் உண்மை, உழைப்பு, கொள்கையில் உறுதி போன்ற திடமான குணாம்சங்களும் இவரை நேசித்த உண்மையான உள்ளங்களின் பங்களிப்பும் இவருக்கு பலமாக பின்புலமாக நின்றன.

எவ்வளவுக்கு எவ்வளவு போராட்டக் குணமுள்ளவராக இருந்தாரோ அதையும் மிஞ்சிய மனிதாபிமான மிக்க மென்மையான குணாம்சங்களையும் கொண்டிருந்தார்.

இவரை எதிர்த்து வருபவர்களும், தர்க்கம் செய்ய வருபவர்களும் இவரது புன்சிரிப்பு மிக்க கனிவான பார்வையில் பெட்டிப் பாம்பாகி விடுவார்கள்.

சந்திரசேகரன் தோல்விகளுக்கும் சதிகளுக்கும் முகம் கொடுக்காமல் இருக்கவில்லை. அவர் எடுத்த எல்லா நடவடிக்கைகளும் அவருக்கு தடைகளில்லாத வெற்றியை தரவில்லை.

முதல் அடியை எடுத்து வைக்கும் குழந்தை பலமுறை விழுந்து விழுந்து எழுவது போன்றே அவரும் தனக்கெதிரான சதிகளையும் தடைகளையும் இலாவகமாக வென்றார்.

நான் அவரிடமிருந்த 10 வருடங்களில் பல்வேறு விடயங்களை கற்றுக் கொண்டேன். அவரின் பாசறையில் வாழ்ந்த நான் இன்று இவ்வளவுக்கு வளர்ந்திருக்கின்றேன் என்றால் அதற்கு நான் அவரிடத்தில் உண்மையாக இருந்திருக்கின்றேன்.

அந்த தலைவனின் அனுக்கிரகம் வழிகாட்டல் எனக்கு கிடைத்திருக்கின்றது. இன்றும் அவரின் புகைப் படத்தை தொட்டு வணங்கிவிட்டுதான் என்பணிகளை செய்ய ஆரம்பிப்பேன். இது நான் பசாங்கு காட்டுவதற்காக கூறவில்லை. இதுவே உண்மை. அவரின் உடல் மட்டும் தான் அழிந்திருக்கின்றது. அவர் இன்றும் எம்முடனே இருக்கின்றார். அவரின் ஞாபகர்த்த நிகழ்வை அவருக்கு செலுத்தும் காணிக்கையாகவே கருதுகின்றேன்.– என்றார்.

# இக்கட்டான சூழல்களில் தமிழகத்துக்கு உறுதுணையாக இருக்கிறது மத்திய அரசு

## பிரதமர் மோடி தெரிவிப்பு



"தமிழ் பண்பாட்டை பற்றி நான் பேசாத நாளே இல்லை. தமிழ் பண்பாடு உலகெங்கும் பரவ வேண்டும் என்ற விருப்பம் எனக்குள் உள்ளது" என்று திருச்சி விமான நிலையத்தின் இரண்டாவது முனைய திறப்பு விழாவில் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

திருச்சி விமான நிலையத்தில் இரண்டாவது முனையம் 1112 கோடி ரூபா மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது. இதன் திறப்பு விழா நேற்று நடந்தது. இந்த விழாவில் பிரதமர் மோடி கலந்துகொண்டு புதிய முனையத்தை திறந்து வைத்தார். திறப்பு விழாவில் பேசிய பிரதமர் மோடி,

"இந்த ஆண்டில் எனது முதல் நிகழ்ச்சியே தமிழகத்தில் நடப்பதை பாக்கியமாக கருதுகிறேன். தமிழக மக்களுக்காக 20 ஆயிரம் கோடி ரூபா மதிப்பிலான திட்டங்களை கொண்டு வந்துள்ளோம். இந்தத் திட்டங்களால் தமிழகம் மேலும் வளர்ச்சியடையும். மேலும், துவங்கப்பட்ட திட்டங்களால் ஏராளமான வேலைவாய்ப்புகள் உருவாகும். கடந்த ஆண்டின் இறுதியில் தமிழக மக்கள் அதிக வலிகளை அனுபவித் தீர்கள். மாநிலத்தில் அண்மையில் கனமழையால் உயிரிழப்பும், உடமைகள் இழப்பும் அதிகம் ஏற்பட்டன. இத்தகைய சூழ்நிலையில் மத்திய அரசு தமிழகத்துக்கு உறுதுணையாக இருந்து வருகிறது.

கடந்த சில தினங்களுக்கு முன்பு விஜயகாந்தை இழந்தோம். அவர் சினிமாவில் மட்டுமல்ல அரசியலிலும் ஹகெப்டன்" தான். திரைப்படங்களில் தன்னுடைய செயல்பாடுகள் வாயிலாக மக்களின் உள்ளங்களை கொள்ளை கொண்டிருக்கிறார் விஜயகாந்த். அரசியல்வாதியாக அவர் மக்கள் நலனை முன்னிறுத்தி வந்திருக்கிறார். அவருடைய மறைவுக்கு என்னுடைய இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் பண்பாட்டை பற்றி நான் பேசாத நாளே இல்லை. தமிழ் பண்பாடு உலகெங்கும் பரவ வேண்டும் என்ற விருப்பம் எனக்குள் உள்ளது. காசி தமிழ் சங்கமம் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நாடு முழுவதும் தமிழை கொண்டு செல்கின்றன. உலகின் தலைசிறந்த நாடுகளின் பட்டியலில் இந்தியா 5 ஆவது இடத்தில் உள்ளது.

தமிழகத்தில் ரயில் போக்குவரத்து மேம்படுத்தப்படுவதால் தொழில் வளர்ச்சியடையும். ஸ்ரீரங்கம், சிதம்பரம், மதுரை, இராமேஸ்வரம், வேலூர் ரயில் மூலம் இணைக்கப்படுகிறது. மாநிலத்தின் வளர்ச்சியே தேசத்தின் வளர்ச்சி என்பதே மத்திய அரசின் நோக்கம். அதை நோக்கியே மத்திய அரசு செயல்படுகிறது. பொருளாதாரம் மற்றும் கலாச்சாரம் மூலமாக இந்தியாவின் வளர்ச்சியில் தமிழகத்தின் சிறந்த பங்களிப்பை காண முடிகிறது. அதேநேரம், தமிழகத்துக்கு முன்பை விட 3 மடங்கு அதிக நிதியை மத்திய அரசு செலவு செய்துள்ளது." – என்றார்.

# உயர் கல்வியின் பூங்கா தமிழ்நாடு: முதல்வர் மு.க. ஸ்டாலின் பெருமிதம்




"உயர் கல்வியின் பூங்காவாக தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களும், தமிழ்நாடும் திகழ்கிறது." என்று பாரதிதாசன் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

இந்த விழாவில் முதல்வர் ஸ்டாலின் பேசுகையில்,

" இந்தியாவிலேயே உயர்கல்வியில் சிறந்து விளங்கும் மாநிலம், தமிழ்நாடு! 'கல்வியில் சிறந்த' என்ற எந்தப் பட்டியல் எடுத்தாலும், அதில் தமிழ்நாட்டு கல்வி நிறுவனங் கள்தான் அதிகமாக இடம்பெற்றிருக்கும்.

100 ஆண்டுகளுக்கு முன்பு நீதிக் கட்சி ஆட்சிக்காலத்தில் கல்விக்காகப் போடப்பட்ட விதைதான், இன்றைக்கு வளர்ந்து, கல்வியில் சிறந்த மாநிலமாக, நாம் உயர்ந்து நிற்கிறோம். அனைவருக்கும் கல்வி – அனைவருக்கும் கல்லூரிக் கல்வி – அனைவருக்கும் ஆராய்ச்சிக் கல்வி என்ற இலக்கோடுதான் சமூகநீதிப் புரட்சியை கல்வித் துறையில் திராவிட மாடல் அரசு நடத்தி வருகிறது.

"இன்னார்தான் படிக்க வேண்டும்" என்று இருந்த நிலையை மாற்றி, அனைவருக்கும் அனைத்துவிதமான வாய்ப்புகளையும் உருவாக்கித் தருகிறோம்.

தமிழ்நாட்டு மாணவர்களை – படிப்பிலும், வாழ்க்கையிலும் வெற்றியாளராக்குவதற்கு "நான் முதல்வன்" திட்டம் உருவாக்கப்பட்டு உள்ளது. உயர்கல்வி மாணவர்களின் சிந்தனைகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில், பல திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

தமிழ்நாட்டில் மொத்தம் 1,623 கலை அறிவியல் கல்லூரிகள் உள்ளன. இவற்றில் 242 மகளிர் கல்லூரிகள்.

இப்படி உயர்கல்வியின் பூங்காவாக தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களும், தமிழ் நாடும் திகழ்கின்றன. கல்வியில் சமூகநீதியையும், புதுமைகளையும் புகுத்துவதே பல்கலைக்கழகங்களின் நோக்கமாக இருக்க வேண்டும். அத்தகைய பல்கலைக்கழகங்களுக்கே சிறப்பான எதிர்காலம் உண்டு." – என்றார்.

# ஜப்பான் எயார்லைன்ஸ் விமான விபத்து: ஐவர் பலி





டோக்கியோவின் ஹனேடா விமான நிலையத்தின் ஓடுபாதையில் இரண்டு விமானங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்திற்குள்ளானதில் ஐவர் உயிரிழந்துள்ளனர்.

ஜப்பானின் ஹொகைடோவிலிருந்து டோக்கியோவிற்கு பயணித்த விமானம் மொன்று தரையிரங்கிய போது ஜப்பானின் கரையோர பாதுகாப்பு படைக்கு சொந்தமான விமானம் ஒன்றுடன் மோதி விபத்திற்குள்ளானது.

ஜே.ஏ.எல். 516 என்ற இந்த விமானம் தீப்பிடித்து எரியும் காணொ லியை ஜப்பானிய அரச ஊடகம் வெளியிட்டுள்ளது.

இதன்போது, விமானத்தில் 367 பயணிகள் இருந்துள்ளனர். அவர்கள் உட்பட 379 பேர் பத்திரமாக வெளியேற்றப்பட்டனர் என அந்த ஊடகம் தெரிவித்தது.

ஜப்பான் எயார்லைன்ஸ் விமானத்தின் உள்ளே இருந்த அனைத்து பயணிகளும் காற்று நிரப்பப்பட்ட சாய்தளம் மூலம் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர்.

எனினும், கடலோர காவல்படை விமானத்தில் இருந்த 6 பேரில் ஒருவர் பத்திரமாக வெளியே வந்துவிட்டார். அதில் இருந்த 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஜப்பானில் நேற்று முன்தினம் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு நிவாரணப் பொருட்களை ஏற்றிக்கொண்டு குறித்த கடலோர காவல்படை விமானம் நிகாட்டா விமான நிலையத்திற்கு செல்லவிருந்ததாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# ஜப்பான் நிலநடுக்கம்: உயிரிழந்தோர் எண்ணிக்கை 62 ஆக உயர்வு!



ஜப்பானில் ஏற்பட்ட நிலநடுக்கத்தினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 62 ஆக உயர்ந்துள்ளது.

ஜப்பானின் மத்தியப் பகுதியில் அந்த நாட்டு நேரப்படி நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் 7.6 மெக்னிடியூட் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

இதனையடுத்து, சுனாமி எச்சரிக்கையும் விடுக்கப்பட்டிருந்தது.

நிலநடுக்கத்தினால் ஏற்பட்டுள்ள இடிபாடுகளில் சிக்கியுள்ளவர்களை மீட்டெடுப்பதற்கு மீட்புக்குழுவைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நிலநடுக்கம் மற்றும் சுனாமி எச்சரிக்கை காரணமாக வீட்டை விட்டு வெளியேறியுள்ளவர்களுக்கு தேவையான உணவு, தண்ணீர் மற்றும் போர்வைகள் உள்ளிட்ட பொருட்களை ஜப்பானிய இராணுவம் வழங்கி வருகிறது.

நிலநடுக்கத்தையடுத்து ஜப்பான் கடற்பகுதிக்கு விடுக்கப்பட்டிருந்த, அனைத்து சுனாமி எச்சரிக்கைகளும் நீக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்க தமது நாடு தயாராக உள்ளது என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

# தாய்வான் சீனாவுடன் இணைக்கப்படும் : ஜி ஜின்பிங் உறுதி

தாய்வான் சீனாவுடன் இணைக்கப்படும் என சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் தெரிவித்துள்ளார்.

2024 புத்தாண்டு கொண்டாட்டத்திற்காக, சீன அதிபர் ஜி ஜின்பிங், தனது நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரி வித்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வருடம் ஜி ஜின்பிங் ஆற்றிய புத்தாண்டு உரையில், “தாய்வான் தீபகற்பத்தின் இரு பக்கமும் உள்ள மக்கள் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள்” என அறிவித்திருந்தார்.

ஆனால், இவ்வருடம் திட்டவட்டமாக இணைப்பை குறித்து அவர் பேசியிருப்பது புதிய சச்சரவிற்கு வழிவகுக்கலாம் என அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.